வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 130/2022

**அரசு தரப்பு சாட்சி 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனியம்மாள் | தாலுக்கா | : | பெரியகுளம் |
| கணவர் பெயர் | : | பாண்டியன் | தொழில் | : | கூலி |
| ஊர் | : | கள்ளிப்பட்டி | வயது | : | 57/2024 |

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)**

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 2023ம் ஆண்டு, **பாரதீய நாகரிக் சுரக் ஷா சன்ஹிதா** பிரிவு 254ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. நாள் 04.12.2024.

**அரசு தரப்பில் 4ம் சாட்சி முதல் விசாரணை**

நான் கள்ளிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன போதுராஜா எனது மகன் ஆகும். ஆஜர் எதிரிகள் மூவரையும் எனக்கு நன்கு தெரியும். எனது மகன் ஆஜர் எதிரிகளுடன்தான் எப்போதும் இருப்பார், எனது மகனின் நண்பர்கள் ஆகும். எனது மகன் இறந்துபோனதாக எங்கள் ஊரில் உள்ள செல்வக்குமார் என்னிடம் வந்து சொன்னார். உடனே நான் எனது மகன் இறந்த இடத்திற்கு சென்றோம். எனது மகன் இறந்த இடம் வடுகபட்டி ரோட்டில் உள்ள பாலத்திற்கு கீழே ஆகும். எனது மகனின் பிரேதம் பாலத்திற்கு கீழே தண்ணீரில் கிடந்தது, நாங்கள் அழுது கொண்டிருந்தோம். எனது கடைசி மகன் அய்யனார் இறந்த எனது மகன் போதுராஜாவை தூக்கி மேலே ரோட்டிற்கு கொண்டு வந்தார். அப்போது எதேச்சையாக போலீஸ் வந்தது. பின்னர் ஆம்புலன்சிற்கு போன் செய்து பெரியகுளம் அரசு மருத்துவமனைக்கு எனது மகனின் பிரேதத்தை கொண்டு வந்து, பின்பு தேனி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள், போலீசார் விசாரித்தபோது, ஆஜர் எதிரிகள்தான் எனது மகனை கொலை செய்ததாக வாக்குமூலம் கொடுத்தேன்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவ இடத்தில் வந்த போலீசார் என்னை அந்த இடத்திலே விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் இல்லை. போலீசார் என்னை விசாரித்தபோது, நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை சொன்னேன். போலீசார் விசாரணையில் சம்பவத்தை கேள்விப்பட்டு, சம்பவ இடத்திற்கு போனேன் என்ற விவரத்தை சொல்லியுள்ளேன். போலீசார் விசாரணையில் தண்ணீரில் கிடந்த போதுராஜாவை தூக்கி ரோட்டிற்கு கொண்டு வந்தோம் என்று சொல்லியுள்ளேன். முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் அனைத்தும் நான் சம்பவ இடத்தில் எனது கண்ணால் பார்த்ததாகும். ஆம்புலன்ஸ் போலீசார் சொல்லிதான் சம்பவ இடத்திற்கு வந்தது. போலீஸ் விசாரணையில் முதலில் போதுராஜாவை பெரியகுளம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று, பின்பு தேனி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம் என்று சொல்லியுள்ளேன். எதிரிகள்தான் எனது மகனை கொன்று விட்டார்கள் என்று நான் சொல்வது நான் சம்பவத்தை நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை, எனது மகன் எதிரிகளுடன்தான் சம்பவத்தின்போது இருந்தார். என்னிடம் தகவல் சொன்ன செல்வக்குமார் எனது ஜாதியை சேர்ந்தவர் அல்ல. செல்வக்குமாரை எனக்கு முன்னமே தெரியும். செல்வக்குமார் எனது வீட்டிலிருந்து இரண்டு தெரு தள்ளி உள்ளார். செல்வக்குமார் வந்து எங்கள் வீட்டில் தகவல் சொன்னபோது, எங்கள் வீட்டில் யார் யார் இருந்தார்கள் என்றால் நானும், எனது மகன் அய்யனாரும் இருந்தோம். எங்கள் இருவரை தவிர வேறு யாருமில்லை. செல்வக்குமார் வந்து தகவல் சொல்லும்போது மணி என்ன இருக்குமென்றால் இரவு 9 மணிக்குமேல் இருக்கும். நானும், அய்யனாரும்தான் சம்பவ இடம் சென்றோம், பின்னர் எங்கள் தெரு ஆட்களும் வந்து விட்டார்கள். எவ்வளவு ஆட்கள் வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. பதட்டத்தில் இருந்ததால் எனக்கு தெரியாது. சம்பவ இடம் நல்ல இருட்டான பகுதியாகும். நான் சம்பவ இடம் சென்றபோது மணி என்ன இருக்குமென்றால் 9 மணிக்குமேல் இருக்கும், சரியாக தெரியாது. வீட்டிலிருந்து சம்பவ இடத்திற்கு பைக்கில் சென்றோம், சுமார் 15 நிமிடத்தில் சென்றோம். சம்பவ இடம் குறிப்பாக வடுகபட்டி பைப்பாஸ் ரோடு மற்றும் ஆண்டிபட்டி செல்லும்

ரோட்டிற்கு நடுவே பாலத்தின் கீழே ஆகும். பாலம் ரோட்டிற்கு கிழக்கு திசையில் ஆகும். பாலத்தின் அகலம் தெரியுமா என்றால் பாலத்தின்கீழே வாய்க்கால் ஓடியது. பாலத்திலிருந்து வாய்க்காலின் ஆழம் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. நான் பார்க்கும்போது பிரேதம் தண்ணீருக்குள் கிடந்தது, குப்புற கிடந்தது. பொதுவாக பிரேதம் குப்புற கிடந்தால் யார் என்று அடையாளம் தெரியாது என்றால் சரிதான். எனது மகனை தண்ணீரிலிருந்து எடுத்தபோது உயிர் இருந்ததா என்றால் இல்லை. போலீசார் சம்பவ இடத்தில் சாட்சிகளை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். போதுராஜா ஏற்கனவே இறந்துவிட்டதால் அமரர் ஊர்திதான் வரவழைக்க வேண்டுமென்றாலும், ஆம்புலன்சை வரவழைக்க தேவையில்லை என்று சொன்னாலும் குற்ற சம்பவம் நடந்தால் உடனே ஆம்புலன்சை வரவழைப்பதுதான் வழக்கம். எதிரிகள் மூவரும் சம்பவ இடத்தில்தான் இருந்தார்கள். போலீசாரிடம் எதிரிகள்தான் போதுராஜாவை கொலை செய்தார்கள் என்று சம்பவ இடத்தில் வைத்து சொன்னபோது போலீசார் அங்கு வைத்தே எதிரிகளை பிடித்து விட்டார்கள். நான் சம்பவ இடத்திலிருந்து மருத்துவமனைக்கு எப்படி சென்றேன் என்றால் பைக்கில் சென்றேன். பைக்கில் ஆம்புலன்சின் பின்னே சென்றோம். நான் அரசு மருத்துவமனை சென்றபோது மணி என்ன என்றால் அதை நான் கவனிக்கவில்லை. பெரியகுளம் அரசு மருத்துவமனையும், தென்கரை காவல் நிலையமும் அருகில் என்றால் சரிதான். பெரியகுளம் மருத்துவமனையில் போலீசார் இருந்தார்களா என்றால் அவர்களும் சேர்ந்துதான் போதுராஜாவின் பிரேதத்தை தேனி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். எனது மகன் இறந்துபோன விவரம் டாக்டர் சொல்வதற்கு முன்பு செல்வக்குமார் சொல்லி தெரியும். எனது மகன் போதுராஜா நன்கு மது அருந்தி குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர் என்றால் இல்லை. புகாரை எனது மகன் எழுதிக் கொடுத்தார். எனது மகன் போதுராஜாவை, ராஜா 5.30 மணியளவில் வீட்டிலிருந்து போன் செய்து அழைத்து சென்றார். எனது மகனின் இறப்பிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், எதிரிகள் மீது போடப்பட்ட வழக்கு பொய் வழக்கு என்று சொன்னாலும் சரியல்ல. எனது மகன் என்பதால் இந்த வழக்கிற்கு தகுந்தபடி போலீசார் சொல்லிக் கொடுத்து

நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்கிறார்கள்.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே , என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
4.12.2024
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.

வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 130/2022

**அரசு தரப்பு சாட்சி 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வக்குமார் | தாலுக்கா | : | பெரியகுளம் |
| தகப்பனார் பெயர் | : | பாண்டியன் | தொழில் | : | LED டீலர் |
| ஊர் | : | கள்ளிப்பட்டி | வயது | : | 41/2024 |

<u>**(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)**</u>

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 2023ம் ஆண்டு, **பாரதீய நாகரிக் சுரக் ஷா சன்ஹிதா** பிரிவு 254ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. நாள் 04.12.2024.

<u>**அரசு தரப்பில் 5ம் சாட்சி முதல் விசாரணை**</u>

நான் டி.கள்ளிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் LED டீலராக சொந்த தொழில் செய்து வருகிறேன். இறந்த போதுராஜா தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகளும், போதுராஜாவும் நண்பர்கள் ஆகும். சுமார் 2 வருடங்களுக்கு எதிரி ராஜா என்னிடம் இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பு வழக்கு சம்பவ தினத்தன்று என்னிடம் போனில் சுமார் அரைமணி நேரம் இரவில் பேசிக் கொண்டிருந்தார். பின்னர் நான் இரவில் சாப்பிட்டுவிட்டு படுத்துவிட்டேன். பின்னர் மீண்டும் சில நேரம் கழித்து எனக்கு எதிரி ராஜா போன் செய்து போதுராஜா பாலத்தின் கீழே விழுந்துவிட்டதாக சொன்னார். உடனே நான் போதுராஜாவின் வீட்டை விசாரித்து, அவரது தம்பி அய்யனாரிடம், அவரது அண்ணன் போதுராஜா பாலத்திலிருந்து கீழே விழுந்து விட்டதாக எதிரி ராஜா போன் செய்ததாக சொன்னேன். உடனே அய்யனார் அவரது பைக்கில் கிளம்பினார். அவருடன் வேறு இருவரும் வந்தார்கள், எதிரி ராஜாவும் பைக்கில் சம்பவ இடம் வந்தார். நாங்கள் சம்பவ இடம் சென்றபோது போதுராஜா பாலத்தின்கீழே கிடந்தார், இறங்கி அனைவரும்

போதுராஜாவை தூக்கினார்கள். போதுராஜாவை தூக்கி ரோட்டில் உட்கார வைத்தபோது, போலீசார் வந்தார்கள், போலீசார் அந்த வழியாக கிராஸ் செய்தபோது வந்தார்கள். பின்னர் ஆட்கள் நிறைய வந்துவிட்டார்கள். பின்னர் போலீசார் ஆம்புலன்சிற்கு போன் செய்து, ஆம்புலன்ஸ் வந்து போதுராஜாவை மருத்துவமனைக்கு ஏற்றிச் சென்றார்கள். எதிரி ராஜாவின் காலில் அடிபட்டிருந்ததால் போலீசார் என்னிடம் எதிரி ராஜாவை பைக்கில் ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்துவர சொன்னார்கள். நான் எனது பைக்கில் எதிரி ராஜாவை ஏற்றி பெரியகுளம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தேன். பின்னர் பெரியகுளம் அரசு மருத்துவமனையில் எதிரி ராஜாவிற்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. நான் பின்னர் வீட்டுக்கு வந்து விட்டேன். போதுராஜா இறந்துவிட்டதாக மருத்துவமனையில் சொன்னார்கள். போலீசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை அனைத்தையும் போலீசார் என்னை விசாரித்தபோதும் சொன்னேன். எதிரிகளை எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் எதிரி ராஜாவை கடந்த 10 வருடங்களாக தெரியும், எதிரி ரஞ்சித்தை 2–3 மாதங்களாக தெரியும், எதிரி வீரமுத்துவை பார்த்தது இல்லை. போலீசார் விசாரணையில் எதிரி ராஜா என்னிடம் சம்பவ தினம் அரைமணி போனில் பேசிய விவரத்தை சொன்னேன். எனக்கு போதுராஜா பாலத்தின்கீழ் கிடந்ததாக தகவல் சொன்னபோது மணி என்ன இருக்குமென்றால் 9 மணிக்கு மேலிருக்கும், குறிப்பிட்டு மணி என்னால் சொல்ல இயலாது. நான் தகவல் தெரிந்து போதுராஜாவின் வீட்டை யார் யாரிடம் விசாரித்தேன் என்றால் பக்கத்தில் விசாரித்தபோது வீட்டை அடையாளம் காட்டினார்கள், போதுராஜாவின் தம்பியிடம் தகவல் சொன்னேன். எனக்கு தகவல் தெரிந்து பின்பு சம்பவ இடம் சென்றேனா என்றால் சென்றேன், என்னுடன் யார் யார் வந்தார்கள் என்றால் அய்யனார் மற்றும் யார் யார் என்று தெரியாது, 2, 3 பேர்கள் அவர்களது வாகனத்தில் வந்தார்கள். சம்பவ இடம் நான் சென்றபோது மணி என்ன இருக்குமென்றால் 9 மணி மேலிருக்கும், குறிப்பாக மணி

சொல்ல இயலாது, 10 நிமிடம் முன்பின் இருக்கும். சம்பவ இடத்தில் உள்ள பாலம் பைப்பாஸ் சாலை என்றால் சரிதான். மேற்படி பைப்பாஸ் சாலையில் வாகனங்கள் அடிக்கடி சென்று கொண்டிருக்கும் என்றால் சரிதான். சம்பவ நாள் நல்ல இருட்டாகும் என்றால் சரிதான், இரவு 9 மணி என்பதால் இருள் நிறைந்திருந்தது. பாலத்திலிருந்து ஆறு எவ்வளவு உயரம் என்றால் 10-20 அடி இருக்கும். ஆற்றின் தண்ணீர் எவ்வளவு இருந்தது என்றால் முழங்கால் அளவு தண்ணீர் இருந்தது. சம்பவ இட பள்ளத்தில் பாட்டில், கற்கள் ஆகியவை நிறைய கிடந்தது. பாலத்தின் மேலிருந்து கீழே தண்ணீரில் விழுந்தால் கீழே கிடக்கும் பாட்டில், கற்கள் ஆகியவற்றால் காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. நான் சம்பவ இடம் சென்றபோது ஆட்கள் இருந்தார்களா என்றால் என் முன்னால் சென்ற 5,6 பேர்கள் இருந்தார்கள். அந்த 5, 6 பேர்கள் நான் தகவல் சொல்லி சென்ற நபர்கள் ஆகும். அந்த 5, 6 நபர்கள் யார் யார் என்றால் அய்யனார், எதிரி ராஜா, நான் மற்றும் வேறு நபர்களின் பெயர் எனக்கு தெரியாது. யார் யார்கள் தண்ணீரில் கிடந்த போதுராஜாவை தூக்கினார்கள் என்றால் நான் தூக்கவில்லை, அய்யனார், எதிரி ராஜா மற்ற நபர்களும் தூக்கினார்கள். வாய்க்காலின் அகலம் சுமார் 10 அடி இருக்கும். போதுராஜாவின் உடல் ஓடை தண்ணீரில் மையத்தில் இருந்தது. ஆம்புலன்ஸ் வரும்போது நான் இருந்தேன். எத்தனை மணிக்கு ஆம்புலன்ஸ் வந்தது என்றால் 15 நிமிடத்தில் வந்தது. நான் இருந்தபோது போலீசார் வந்தார்கள். சம்பவ இடத்திலிருந்து போலீசார் வேறு ஏதேனும் கைப்பற்றினார்களா என்று எனக்கு தெரியாது. நான் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் சென்றேன். போதுராஜாவை பாலத்தின் அருகில் சாய்ந்து உட்கார வைத்திருந்தார்கள். போதுராஜாவை ஆம்புலன்சிற்கு அழைத்து சென்றார்கள் என்று சொல்வது சரியா என்றால் அவரை நடத்தி கூட்டி செல்லவில்லை, தூக்கி சென்றார்கள். சம்பவ இடத்தில் போலீசார் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை. சம்பவ இடத்தில் வைத்து எதிரி ராஜா மட்டுமே நான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். பெரியகுளம் மருத்துவமனையில் எதிரி ராஜாவை அழைத்து சென்றபோது போலீசார் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். போதுராஜா எனது நண்பர் என்றால் சரிதான், 10 வருடங்களாக அவரை தெரியும், எதிரி

ராஜாவும் எனது நெருங்கிய நண்பர்தான். போதுராஜாவிற்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றால் உள்ளது, எப்போதாவது மது அருந்துவர், சமீபத்தில் அவருக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. போதுராஜா எனது நெருங்கிய நண்பர் என்பதால் போலீசார் சொல்லிக் கொடுத்து நான் இந்த வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் மற்றும் போதுராஜாவின் இறப்பிற்கும், இந்த எதிரிகளும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்கிறார்கள்.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே , என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
4.12.2024
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.